# <u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கரூர் பிரிவு அலுவலகத்தை அணுகி, தன்னுடைய மனைவி பெயரில் உள்ள 4 வீட்டுமனைகளை வரைமுறைப்படுத்த தான் வட்டார வளர்ச்சி அலுவலகம் க.பரமத்தி கிராம ஊராட்சி, கரூர் மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைகாக வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.குமரவேல், தனக்கு ரூ.25,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 23.11.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.குமரவேல் புகார்தாரரிடமிருந்து ரூ.25,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Karur detachment, and gave complaint that he had applied for regularisation of 4 house plots at Block Development Office, K.Paramathi Village Panchayat Office, Karur District, for which Tr.Kumaravel, Block Development Officer, K.Paramathi Village Panchayat Office, Karur District, demanded Rs.25,000/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today 23.11.2021.

During trap proceedings, the accused Tr.Kumaravel, Block Development Officer, reiterated their earlier demand and received the bribe amount of Rs.25,000/- from the complainant. The accused was arrested.